Volume 4 Issue 1 August 2022 E-ISSN: 2582-2063

# தட்சிணாமூர்த்தியும் வழிபாடும் ஓர் பார்வை

**முனைவர் பா.ஜெயா**
*இந்திய பண்பாட்டுத்துறை*
*அருள்மிகு பழனியாண்டவர் கலை மற்றும் -பண்பாட்டு கல்லூரி, பழனி*

சிவன் என்ற சொல்லுக்குமங்கலவடிவினன் என்று பொதுவானப் பொருள் கூறுவர். மங்கலம்-நன்மை. தானும் மங்கல வடிவோடு விளங்கியத் தன்னை வழிபடும் அடியவர்களையும்,மங்கலத்துக்கு உரியவர்களாகச் செய்யும் தெய்வம் சிவபிரான். அச்சிவபிரானின் திருவுருவங்கள் சிவாகமங்களில் கூறப்பட்டுள்ளன. அவ்வுருவ நிலைகளைச் சிவமூர்த்தங்கள் என்று ஆன்றோர் கூறுவர். இறைவன் கொண்டருளிய வடிவங்கள் போக வடிவம், யோக வடிவம், வேக வடிவம் என மூன்றாகும். இதனை

போகியாய் இருந்த உயிர்க்குப்
போகத்தைப் புரிதல் ஓரார்...

என்ற சிவஞான சித்தியார் பாடலால் அறியலாம்.

**போக வடிவம்:** உமாமகேசுவர மூர்த்தம், சந்திரசேகரமூர்த்தம், இடபாரூட மூர்த்தம், சோமாஸ்கந்தமூர்த்தம், கோல்வன போக வடிவங்களாகும்.

**யோக வடிவம்:** தட்சிணாமூர்த்தி மூர்த்தம், சுகாசன மூர்த்தம் போல்வன யோக வடிவங்களாகும்.

**வேக வடிவம்:** காமாரி மூர்த்தம், காலாரி மூர்த்தம், கங்களார் மூர்த்தம் போல்வன வேக வடிவங்களாகும்.

### யோக வடிவம் உடைய தட்சிணாமூர்த்தி

போக, யோக, வேக வடிவங்களில் சிறந்தது யோக வடிவமாகும். உயிர்களுக்கு யோகநிலைகளை அருள்வதற்காக இந்த வடிவங்களை இறைவன் கொண்டருளினார் என்பவர். இந்த யோக வடிவங்களுள் ஒன்றுதான் தட்சிணாமூர்த்தி.

### தட்சிணாமூர்த்தி தோற்றம்

உமாதேவி மலை அரசனின் மகளாகப் பிறந்து தவச்சாலையில் தவத்தில் இருந்தாள். அச்சமயம், பிரம்ம தேவனின் புத்திரர்களாகிய சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர் ஆகிய நான்கு முனிவர்களும், நான்கு வேதங்களைக் கற்றும், அவற்றின் ஆறு அங்கங்களைக் (பிரிவு) கற்றும் அதன் உட்சருத்தை அறிய முடியாதவர்களாய் இருந்தனர். அவர்கள் கைலாசத்தை அடைந்து திருநந்தி தேவரின் அனுமதிப் பெற்று சிவபெருமானை வணங்கினர்.

சிவபெருமானிடம் நாங்கள் வேத ஆகமங்களைக் கற்றும் மனம் தெளிவடையாது, மும்மலப் பாச இருள் நீங்க முடியாதவர்களாய் உள்ளோம். எனவே, தாங்கள் நாங்கள் உய்யும் வண்ணம் அருள்புரிய வேண்டும் என்று வேண்டினர். சிவபெருமான் அவர்களைக் கையமர்த்தி, அவர்களுக்கு உபதேசிக்கும் குருபீடமாகிய தட்சிணாமூர்த்தி வடிவாகக் காட்சியளித்தார்.

**தட்சிணாமூர்த்தி உருவ அமைப்பு**

சிவபெருமானின் ஈசானம், தத்புருடம், வாமதேவம், சத்யோஜாதம், அகோரம் என்னும் ஐந்து முகங்களும், தெற்கு நோக்கி உள்ள முகத்திற்கு அகோரமுகம் என்று பெயர். சொல்லியுள்ள அகோர முகம் உயிர்களுடைய பாவங்களை நீக்கி நன்மை தரும். அதன் பொருட்டு தட்சிணாமூர்த்தியாகிய தென்முகக் கடவுள் தோன்றினார். (தெற்கு நோக்கிய மற்றொரு உருவம் கூத்தபிரான்).

தென்முகக் கடவுள் கல்லாலமரத்தின் கீழ் யோகாசனத்தில் அமர்ந்து (முயலகனை மிதித்த திருவடி ஒன்றும், வீராசனமாக மற்றொரு திருவடியுமாக) நான்கு திருகரங்கள் கொண்டுள்ளார். இதில் வலப்பக்கம் உள்ள இரண்டு திருக்கரங்களில் சின்முத்திரையும், உருத்திராக்க மணிவடமும், இடப்பக்கம் உள்ள இரண்டு திருக்கரங்களில் அமுதகும்பமும் (அக்னி) வேதமும் வைத்துள்ளார்.

**தட்சிணாமூர்த்தி திருவுருவம் உணர்த்தும் தத்துவம்**

நெற்றியில் அணிந்துள்ள திருநீறானது நெற்றியின் கண் உள்ள அக்கினி விழியை மறைத்து ஞானத்தை அளிக்கவல்லது. திருச்செவியில் அணிந்த குண்டலமானது நம்மிடம் உள்ள இருளை நீக்கி ஒளி வீசச் செய்யும் தன்மை உடையது. சின்முத்திரை சித்+முத்திரை= ஞானத்தைக் காட்டும் அடையாளம். இதைக் கைகாட்டு என்றும் கூறுவர். சின்முத்திரை என்பது வலது கையால் அதன் பெருவிரலையும், அதன் சுட்டு விரலையும் ஒன்றாய்ச் சேர்த்தும் மற்ற மூன்று விரல்களை நீட்டியும் காட்டும் அடையாளம். அதாவது, பெருவிரலாகிய இறைவன், சுட்டுவிரலாகிய ஆன்மாவை, மற்ற மூன்று விரல்களாகிய ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களினின்றும் நீக்கும் என்ற தத்துவத்தை உணர்த்துவதாகக் கொள்ளலாம். நடுவிரல் சுட்டு விரலைவிட நீண்டு இருத்தல் ஆணவத்தின் தன்மையை உணர்த்தும். அணிவிரல் கன்மத்தையும், கடைவிரல் மாயையையும் குறிக்கும். அமுதகும்பம் இது இடது திருக்கரத்தில் இருக்கிறது. மலநீக்கம் மற்றும் சிவப்பேறு என்னும் பயன்கள் வாய்ப்பதற்குச் சாதனம் சிவஞானம் என்பதை உணர்த்துவது அமுதகும்பம். உருத்திராக்க மணிவடம் மற்றொரு வலது திருக்கரத்தில் உள்ளது சிவஞானத்தில் நிலைத்து இருப்பதற்காக திருஐந்தெழுத்தைக் கணிக்க வேண்டும் என்பதை உணர்த்தும். மற்றொரு இடது திருக்கரத்தில் இருப்பது வேதம். இது மூன்று திருக்கரங்களினாலும், இரண்டு திருவடிகளாலும் உணர்த்திய உண்மைப் பொருளை இனிது விளக்குவதாகும். முயலகனை மிதித்த திருவடி சிவஞானிகள் சீவன் முத்தாய் வாழும் காலத்தில், (சிவனையே சிந்தித்திருக்கும் காலத்தில்) ஆணவ மலம் தலையெடுக்கா வண்ணம் அதனை அமிழ்த்துதற்குரிய பயிற்சியை (சாதனம்) செய்து வரவேண்டும் என்பதை உணர்த்துகின்றது. வீராசனம் மேலே கூறிய ஆணவம், கன்மம், மாயைகளை நீக்கம் செய்து வருதலோடு, மலம் நீங்கிய சிவன் அடியாருடன் கூடி, சிவ பக்தர் அல்லாதவர்களோடு இணங்காது வீரமாய் இருக்க வேண்டும் என்பதை அறிவிக்கிறது. கல்லால்நீழல் விருப்பு, வெறுப்பு முதலியவற்றை தரும் இராசத, (கோபம்) தாமத, (மந்தம்) குணங்களைச் சார்ந்து இருக்க வேண்டும் என்பதையே உணர்த்துகிறது. தென்முகம் கடவுள் தென்முகமாக வீற்றிருப்பதை அகோர முகம் என்பர். பாவங்களை நீக்கி அருளை உணர்த்துவதைக் குறிக்கும்.

**யோகதட்சிணா மூர்த்தி காட்டும் யோக முறை**

சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர் என்னும் முனிவர்கட்குச் சிவபெருமான் யோகமுறையை உபதேசித்து அருளியமையால், யோக தட்சிணாமூர்த்தி என்ற திருநாமம் விளங்குவதாயிற்று. சிவபெருமான் தட்சிணாமூர்த்தியாக எழுந்தருளியிருக்கும் சமயம், யாழில் வல்லவர்களாகிய தும்புருவர், நாரதர், சுகர் முதலிய மகரிஷிகள் நந்திதேவர் அனுமதி பெற்று இறைவனை வணங்கித் துதித்தனர். அவர்கள் சிவபெருமானிடம், உன்னால் அருளப்பட்ட வேதமாகிய நாம வேதத்தை வீணாகானம் கொண்டு நாங்கள் பாடுவதும், இன்னிசை ஞானத்தின் ரகசியங்களைத் தெளிவுறத்தெரிந்து கொள்வதும் எங்கள் கடமையாகும். ஆகவே, அதனைத் தாங்கள் தெளிவுற உணர்த்த வேண்டும் என வேண்டினர். சிவபெருமானும் அவர்கள் விரும்பியுள்ள வீணாகானத்தின் லட்சணம் இன்னின்ன விதம் என்பதை திருவாய் மலர்ந்தருளினார். அதன் பின்னர் சிவபெருமான் தன் திருக்கரத்தில் வீணை ஏந்தி, தன் தோள்களில் அணைத்து, தன் திருவிரல்களால் நாதகீதம் இயற்றி அருளினார். இந்த இன்னிசையினால் மூவுலகிலும் வாழும் உயிர்களின் உள்ளங்களில் இன்ப வெள்ளம் பாய்ந்து அன்புமயமாய் பொங்கித் ததும்பியது. சிவபெருமான் மெய்யன்பர்கள், உள்ளங்கனிந்து பண்ணிசைத்துப் பாடும்போது இனிய கீதமாய் அமைத்து திருவருள் சொரிந்து, மகிழ்ந்தருளும் தன்மை உடையவர் பரமானந்தம் எய்தும்படி அருள்கின்ற சிவபெருமான் முனிவர் காரணமாக வீணாதட்சிணாமூர்த்தி எனவும் போற்றுதற்குரியவர் ஆனார்.

**புராணம்**

திருக்கைலாசமலையில் தேவர்கள், முனிவர்கள், உமாதேவி சமேதராய் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானை வணங்கி, பொன்மணிகளால் அலங்கரிக்கப்பட்டுள்ள மகா மண்டபத்தில் நிறைந்திருந்தனர். அப்பொழுது உமை அம்மை சிவபெருமானை வணங்கி, சிவத்துரோகியாகிய தக்கனிடம் தான் வளர்ந்த காரணத்தால் தாட்சாயிணி என்னும் பெயர் பெற்றிருப்பதை மாற்றி அருளல் வேண்டும் என்று வேண்டுகோள் வைக்கிறார்கள். தாய் உமையம்மையின் கோரிக்கையை ஏற்று சிவபெருமான் மகளிழ்வடைந்து, உமையை நோக்கி, இமைய பர்வதராசன் உன்னைப் புதல்வியாக அடைய வேண்டும் என நம்மை நோக்கி கடுந்தவம் புரிகின்றான். நீ அங்கு சென்று வளர்வாயாக. யாம் அங்கு வந்த உன்மை மணம் செய்து கொள்வோம் என்று கூறுகிறார். உமாதேவியும், சிவபெருமானை வணங்கி கடுந்தவம் புரியும் மலையரசனிடம் குழந்தை உருவமாய் செல்கிறார். அரசனும், அவன் மனைவி மேனா தேவியும், தாய் உமையம்மையை தன் குழந்தையாகப் பாவித்து வளர்க்கின்றனர். ஐந்து வயது முதல் தவச்சாலையில் இருந்து பின் இறைவனை வேண்டி மணம் புரிந்து கொண்ட செய்தியைக் கலியாண சுந்தரமூர்த்தி வரலாற்றில் அறியலாம்.

**தட்சிணாமூர்த்தி காட்டும் வழிபாடும் பயனும்**

நம்மைப் போன்ற உயிர்களின் பாவங்களைப் போக்கி நன்மையை ஏற்படுத்தக்கூடியவர் தென்முகக் கடவுள். இம்மூர்த்தியே எல்லாவுயிர்களுக்கும், ஞானபதேசம் செய்து, மேல்நிலையை அடைய அருள் புரிபவர் ஆவார். சிவாலயத்தை வலம் வரும்போது கற்பகிரகத்தின் தென்புறத்தில் தட்சிணாமூர்த்தியின் திருவுறுவத்தைக் காணலாம். அத்தென்முகக் கடவுளின் திருவுருவத்தின் முன் சற்று அமர்ந்து தியானம் செய்து, ஐந்தெழுத்து மந்திரத்தை ஓதி, வணங்கிச் செல்வதால் மனம் அமைதி அடைகிறது.

கல்விஞானத்தினை அருளுவதோடு, உயிர்களின் மனஇருளை நீக்கி ஒளி வளங்கச் செய்பவரும் இவரே. நவக்கிரகத்தில் குருவினால் ஏற்படும் பலக் குறைவு தட்சிணாமூர்த்தியின் அருளாலேயே நிவர்த்தி அடைகிறது எனலாம். அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கு நிலைகளின் உட்கருத்தை அறியச் செய்பவர் தென்முகக்கடவுள். அருளை வழங்கும் தட்சிணாமூர்த்தியை வழிபடுவதால், நம்மிடம் உள்ள ஆவணம், கன்மம், மாயை ஆகியவற்றை அழித்து மேலான நிலையை அடையலாம். வியாழக்கிழமைகளில் தட்சிணாமூர்த்தியை வழிபடுவது குருவை வழிபடுவதைக் காட்டிலும் மேன்மை பொருந்தியது எனலாம். நாமும் தட்சிணாமூர்த்தி வழிபாடு செய்து வளமோடு வாழ்வோம்.